சாட்சியின் வாக்குமூலம்

பாகம் 111 சுற்றறிக்கை உத்தரவு 11 உ.வி.மு.ச பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

முதன்மை சார்பு நீதிமன்றம், திண்டுக்கல்

**அசல் வழக்கு எண். 73/2019**

**வாக்குமூலம் எண் : வா.சா.1**

பெயர் : பெஞ்சமின் ஜோசப் மதம் :

த/க/ பெயர் : ஆரோக்கியம் ஜாதி :

கிராமம் : தொழில் :

தாலுகா : வயது :

மாவட்டம் :

1873ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10–ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்ஙனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு **22.06.2026 ஆம்** தேதி சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை :**

நான் இந்த **வழக்கில் வாதி** ஆவேன். நான் **வாதித் தரப்பில் 1ஆம் சாட்சி** ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நான் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யாவும் உண்மை என்றும், நிஜம் என்றும் உறுதியளிக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பு சாட்சியமாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன். என் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை **வாதி தரப்பு சான்றாவணங்களாக** குறியீடு செய்துகொள்ளுமாறு வேண்டுகிறேன். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**வாதி தரப்பு சான்றாவணம் :–**

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 05.05.2015 | 1ஆம் பிரதிவாதி எனக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் எண்.801/2015 ஆவணத்தின் இணையதள கணினி சான்று நகலை ஆவணமாக தாக்கல் செய்கிறேன். | இணையதள கணினி சான்று நகல் |
| வா.சா.ஆ.2 | 07.08.2015 | 4ஆம் பிரதிவாதி, எனக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவண எண்.1448/2015 ஆவணத்தின் இணையதள கணினி பதிவிறக்க சான்று நகலை ஆவணமாக | இணையதள கணினி சான்று நகல் |

| | | | |
|---|---|---|---|
| | | தாக்கல் செய்கிறேன். | |
| வா.சா.ஆ.3 | – | 1ஆம் பிரதிவாதி என் மீது தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.490/2017–ன் பிராது நகலின் அலுவலக நகலை ஆவணமாக தாக்கல் செய்கிறேன். | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.4 | – | 3ஆம் பிரதிவாதி, என் மீது தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.573/2018–ன் பிராது நகலின் அலுவலக நகலை ஆவணமாக தாக்கல் செய்கிறேன். | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.5 | 27.10.2018 | 1 முதல் 3 பிரதிவாதிகள் மீது கன்னிவாடி காவல் நிலையத்தால் வழங்கப்பெற்ற புகார் ஏற்புச் சான்றின் கணினி நகலை ஆவணமாக தாக்கல் செய்கிறேன். | கணினி நகல் |
| வா.சா.ஆ.6 | 28.12.2018 | நான் 1 முதல் 3 பிரதிவாதிகள் மீது கொடுத்த புகார் மனுவின் கை நகலை ஆவணமாக தாக்கல் செய்கிறேன். **(மேற்படி ஆவணத்தின் உண்மை தன்மையை வாதியே நிரூபிக்க வேண்டும் என்று ஆட்சேபனை செய்யப்பட்டு, ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்ய அனுமதிக்கப்படுகிறது).** | கை நகல் |
| – | – | கன்னிவாடி பாரத ஸ்டேட் வங்கியின் மேலாளர் கொடுத்த ஒப்புதல் சீட்டு நகலை தாக்கல் செய்கிறேன். | நகல் |

மேற்கண்ட ஆவணங்கள் வா.சா.ஆ–1 முதல் வா.சா.ஆ–6 ஆக குறியீடு செய்யப்படுகின்றன.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கினங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Typed to my dictation in Open Court read over to me and Acknowledged by him / her to be correct.

THIYAGARAJAN GOKULAKRISHNAN

Digitally signed by THIYAGARAJAN GOKULAKRISHNAN
Date: 2026.06.22 20:12:05 +0545

Principal Sub Judge,
Dindigul